வெளியீடு எண். 721.

உ

சிவமயம்

# மேலைத் திருக்காட்டுப்பள்ளி -
# திருவாலம்பொழில் திருப்பதிகங்கள்



சம்பந்தர்



அப்பர்

Q23:38·21193·T
N78

[ அடக்க விலை ரூ. 0—50

1978



தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

R.R. No 2165/55/79

வெளியீடு எண். 721.

உ

சிவமயம்

# மேலைத் திருக்காட்டுப்பள்ளி - திருவாலம்பொழில் திருப்பதிகங்கள்

இந்நூல்,

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவுளப்பாங்கின் வண்ணம்


" ஞானசம்பந்தம் பதிப்பகத்தில் "

வெளியிடப்பெற்றது.

தருமையாதீனம்

11—6—1978.

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.



தருமையாதீனக் குருமுதல்வர்

**ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

உ

சிவமயம்

# முன்னுரை

அண்ணல் ஆலவாய், நண்ணி னுன்றனை
எண்ணி யேதொழத், திண்ணம் இன்பமே.

— ஞானசம்பந்தர்.

உலகில் மக்களாய்ப் பிறந்தோர் அனைவரும் இறைவனை வழிபட்டுப் பேரின்பம் பெறுதற்குரியவராவர். "மானுடப்பிறவி தானும் வகுத்தது மனம்வாக்காயம் ஆனிடத்தைந்தும் ஆடும் அரன்பணிக்காக அன்றே" என்றுகூறியருளுகின்ற அருணந்தி சிவாசாரியாரின் அமுதமொழி நம்மை நன்னெறிப்படுத்தவல்ல தாகும். தேவாரம் பெற்ற திருத்தலங்கள் இறைவன் உறையும் திருக்கோயில்களில் சிறந்தனவாகும். இத்தகைய திருக்கோயில்கள் நம்நாட்டில் 274 உள்ளன. அவற்றுள் சோழநாட்டில் உள்ளவை 190. காவிரியின் வடகரையில் உள்ளவை 63; தென்கரையில் உள்ளவை 127. இத்திருத்தலங்களை முறையே தொடங்கி வழிபடுவது சிறந்த சிவபுண்ணியமாகும்.

தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் தங்களது ஜன்மநக்ஷத்திர நாட்களில் பாடல்பெற்ற சிவதலங்கள்தோறும் வழிபாடுகள் நிகழ்த்தி அன்பர்கள் பலரையும் இறையருட் சிந்தனையில் ஈடுபடுத்தியருளியதுபோல அவர்கள் அருளாட்சி முறைகளைப்

பின்பற்றி 26 ஆவது குருமணியாக இலங்கும் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும்** தங்கள் நாண் மங்கல விழா நாட்களில் தேவாரப் பாடல்பெற்ற சிவதலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தி அன்பர்கள் பலரையும் இறை வழிபாட்டு நெறிகளில் ஈடுபடுத்தியருள்கின்றார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் இம்மாத ஜன்ம நட்சத்திர ஆயில்யநாள் விழா வழிபாடு, காளயுக்தி ஆண்டு வைகாசித்திங்கள் 28ஆம்நாள் (11—6—78) ஞாயிற்றுக்கிழமை மேலைத்திருக்காட்டுப்பள்ளி, திருவாலம்பொழில் ஆகிய இரு தலங்களிலும் நிகழ்கிறது.

சுவாமி அம்பாள் மற்றும் முக்கிய மூர்த்திகளுக்கு அபிஷேக அர்ச்சனை ஆராதனைகள் நடைபெறுகின்றன. தலத் திருப்பதி கங்கள் அச்சிட்டு வழங்கப்பெறுகின்றன. சமய விரிவுரைகள் நிகழ்கின்றன. அன்பர்கள் பலரும் இவ்விழாவில் கலந்து கொண்டு திருவருளையும் குருவருளையும் பெற்று இன்புறுவார் களாக.

வாழ்க தருமைக் குருமணி!

வளர்க சமயப்பணி!!

இன்னணம்,

அருளாணையின் வண்ணம்,
அடியவன்,

**வி. சா. குருசாமி,**
ஆதீனப் புலவன்.

தருமபுரம்,
9—6—78.

உ

சிவமயம்

தருமையாதீனத்தை நிறுவியருளிய

# ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாறு

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரை ஆள அவர்போல் வந்த
சைவசிகாமணி எவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடிய பொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்கணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவிவாழ்வாம்.

— சம்பந்த சரணாலயர்.

ஸ்ரீ வில்லிபுத்தூரில் கார்காத்த வேளாளர் குலத்தில் சுப்பிரமணிய பிள்ளைக்கும் மீனாட்சியம்மைக்கும் அருந்தவ மகவாக அவதரித்தார் ஸ்ரீ குருஞானசம்பந்தர். மதுரையம் பதிக்குத் தம் பெற்றோருடன் சென்று குல தெய்வமாகிய ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டார். திருவருளால், பொற்றாமரைக் குளத்தின் ஈசானமூலையில் பெட்டகக்கோயிலுடன் சொக்கநாதர் கண்ணுக்கினிய பொருளாகக் கைவரப்பெற்றார். சொக்கேசன் அருளால் திருவாரூர் சென்று ஞானப்பிரகாச தேசிகரை வணங்கிச் சிவஞானோபதேசம் பெற்றார். சொக்கநாதர் பூஜையும்

எழுந்தருளச் செய்து கொடுக்கப்பெற்ருர். குருவாணைப்படித் தருமபுரத்தில் அமர்ந்து பக்குவான்மாக்களுக்கு ஞானோபதேசம் செய்து சைவ சித்தாந்தத்தை எங்கும் பரவச்செய்தார். தமது ஆன்மார்த்தமூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதர்மீது சொக்கநாத வெண்பாப் பாடித் துதித்தார். சிவபோகசாரம், முத்திநிச்சயம், சொக்கநாதக் கலித்துறை, ஞானப்பிரகாசமாலை, சோடசகலாப் பிராசாத சட்கம், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், நவரத்தினமாலை ஆகிய நூல்களையும் அருளிச்செய்தார்.

இவ்வாறு, பல்லாண்டுகாலம் ஞான அரசாட்சி புரிந்து சிவலிங்கத் திருவுருவின்கீழ் ஜீவசமாதி கூடினுர் ஸ்ரீ குருஞான சம்பந்தர். அவர் ஜீவசமாதிகூடிய குருமூர்த்தமே தற்பொழுது ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலாக விளங்கிவருகிறது. கி. பி. 16 ஆம் நூற்ருண்டில் ஸ்ரீ குருஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப்பெற்ற இத் தருமையாதீனம் மொழித் தொண்டும் சமயத் தொண்டும் சமூகத் தொண்டும் ஒல்லும் வகையெல்லாம் ஆற்றிவருகின்றது. ஸ்ரீ குருஞான சம்பந்தரது பரம்பரையில் தற்பொழுது 26 - ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருப்பவர்கள் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** ஆவார்கள். அவர்களால் தமது ஆதி பரமாசாரிய சுவாமிகளாகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருப்பெயரில் நிறுவப்பெற்ற " ஞானசம்பந்தம் பதிப்பக " அறக்கட்டளை வெளியீடாக இந்நூல் வெளியிடப் பெற்றது.

உ

சிவமயம்

# மேலைத்திருக்காட்டுப்பள்ளி - திருவாலம்பொழில் தலச்சிறப்புக்கள்

'பூந்தண் பொன்னி எந்நாளும் பொய்யாதளிக்கும் புனல் நாடு' என்று தெய்வச் சேக்கிழார் பெருமானால் போற்றி உரைக்கப்பெற்ற சோழவள நாட்டில் காவிரியின் தென்கரையில் விளங்குவன இத்தலங்கள். தஞ்சையிலிருந்து பேருந்துகளின் மூலம் இவ்விருதலங்களையும் எளிதில் அடையலாம்.

## மேலைத்திருக்காட்டுப்பள்ளி

இறைவன் உறையும் திருக்கோயில்களைப் பள்ளி என்று குறித்தனர் ஆன்றோர். இத்தகைய பள்ளி என்ற பெயருடைய தலங்கள் பலவற்றைத் தொகுத்துரைக்கின்ற திருநாவுக்கரசு சுவாமிகள்,

பொருப்பள்ளி வரைவில்லாப் புரமூன் றெய்து
புலந்தழியச் சலந்தரனைப் பிளந்தான் பொற்சக்
கரப்பள்ளி திருக்காட்டுப் பள்ளி கள்ளார்
கமழ்கொல்லி யறைப்பள்ளி கலவஞ்சாரல்
சிரப்பள்ளி சிவப்பள்ளி செம்பொன் பள்ளி
செழுநனி பள்ளிதவப் பள்ளிசீரார்
பரப்பள்ளி யென்றென்று பகர்வோ ரெல்லாம்
பரலோகத் தினிதாகப் பாலிப்பாரே.

என்று அருளிச்செய்கின்றார். சோழவளநாட்டில் காட்டுப்பள்ளி என்ற பெயருடைய பாடல் பெற்ற தலங்கள் இரண்டு உள்ளன. காவிரியின் வடகரையில் திருவெண்காட்டுக்கு அருகில் உள்ள தலம் கீழைத் திருக்காட்டுப்பள்ளி எனப்பெறும். இத்தலம் மேற்றிசையில் உள்ளதாதலின் மேலைத்திருக்காட்டுப்பள்ளி என வழங்கப்பெறும்.

திருக்காட்டுப்பள்ளி திருச்சிராப்பள்ளி தஞ்சை இருப்புப் பாதையில் பூதலூர்ப் புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே 8 கி. மீ. தூரத்தில் விளங்குகிறது. திருக்கண்டியூர் திருவையாறு இத்தலங்களிலிருந்து பேருந்து மூலமாக இத்தலத்தை அடைய லாம். கந்தர்வகோட்டையிலிருந்தும் கல்லணையிலிருந்தும் இவ்வூரை அடையப் பேருந்துகள் உள்ளன.

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பாடிய பதிகம்ஒன்றும் அப்பர்பாடிய பதிகம் ஒன்றும் ஆகிய இரண்டு திருப்பதிகங் கள் உள்ளன. சுவாமி பெயர் அருள்மிகு தீயாடியப்பர். வட மொழியில் அக்னீஸ்வரர் எனப்பெறுகிறார். அருள்மிகு அழகமர் நாயகி. வடமொழியில் சௌந்தரநாயகி எனப்பெறுகிறார். தீர்த்தம் - அக்கினிதீர்த்தம். காவிரி. தலமரம் - வன்னி, வில்வம் இரண்டும் உள்ளன.

**கோயிலமைப்பு:**

பழையகாலத்தில் கோட்டை கொத்தளங்களோடு கூடிய பெரிய நகரமாக இவ்வூர் விளங்கியிருந்தது. கோயில் ஊரின் நடுவே பேருந்து நிலையத்துக்கு அண்மையில் கிழக்குநோக்கி உள்ளது. ஏழு நிலைகளோடு கூடிய இராஜகோபுரம் புத்தம் புதிய சுதைச் சிற்பங்களோடு திருப்பணி செய்யப்பெற்றுள்ளது. உள்ளே நுழைந்ததும் விநாயகர் காட்சியளிக்கிறார். கொடிமரம், பலிபீடம், நந்தி ஆகியன நம் கண்களுக்கு இலக்காகின்றன. சுவாமி கிழக்குநோக்கியும் அம்பாள் சந்நிதி முதற்பிராகாரத்தில் தெற்குநோக்கியும் உள்ளன. அம்மன் சந்நிதிக்கு எதிரே

வடக்குமுகமாய் நர்த்தனவிநாயகர் விளங்குகிருர். இண்டாம் கோபுரத்தைக்கடந்து உள்மண்டபத்தை அடைந்தால் வலது புறம் நடராசர் சபாமண்டபம். மண்டபத்தின் கீழ்ப்புறமேடையில் பைரவர், சமயாசாரியர் திருவுருவங்கள் உள்ளன. முன் மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்ருல் சுவாமி சந்நிதியை அடையலாம். சுவாமி எழுந்தருளியுள்ள இடம் மிகப் பள்ளமாக உள்ளது. மகாமண்டபத்தில் உற்சவ விக்கிரகங்கள் உள்ளன. உட்பிராகாரத்தில் வலம்புரிவிநாயகர், திருமால், இலக்குமி, தக்ஷிணுமூர்த்தி, இலிங்கோற்பவர், முருகன், துர்க்கை, சண்டேசுவரர் திருவுருவங்கள் உள்ளன.

திருமால் பிரமன் சூரியன் அக்கினி பகீரதன் உறையூர்ச் சோழனின் மூத்தமனைவி ஆகியோர் வழிபட்டு அருள்பெற்றுள்ளனர்.

**புராண வரலாறு :**

ஒருசமயம் இந்திரன் முதலிய தேவர்கள் இத்தலத்திற்கு வந்து இறைவனையும் இறைவியையும் வழிபட்டு மகிழ்வுற்றனர். அப்போது தேவர்கட்கு முகம்போல் விளங்கிய அக்கினிதேவன் உலகில் எல்லாப்பொருளையும் அழிப்பதால் தனக்கு ஏற்படும் பாவத்தைப் போக்கிக்கொள்ள இத்தலத்திறைவனைப் பூசைகள் பலவும் புரிந்து வழிபட்டான். இறைவன் அக்னிதேவனுக்குக் காட்சியளித்து 'உன்பெயரால் தீர்த்தமொன்றமைத்து அதில் நீராடி நம்மை வழிபட்டு வருக அருள்புரிவோம்' என்றருளினர். அக்கினிதேவன் அவ்வாறே வழிபட்டுவந்தான். இறைவன் அருட்காட்சி வழங்கி அக்கினிதேவனுக்கு அருள்புரிந்தார். அக்கினி வழிபட்ட கோயில் அக்னீச்சுவரம் எனப்பெற்றது. அக்னிக்கு அருள்புரிந்தகாரணத்தால் இறைவன் அக்னீச்சுவரன் எனப் பெயர்பெற்ருர். அக்னிதீர்த்தம் இன்று கிணறு வடிவில் உள்ளது.

'அக்கினியீச் சுரமென்ருேர் பெயர்பெற்ற தக்கோயில்
அக்கினியீச் சுரனென்ருேர் பெயர்பெற்ருர் அங்கணனும்
அக்கினிமா தீர்த்தமென்ருேர் பெயர்பெற்ற தத்தீர்த்தம்
அக்கினிய தெனப்புனேவார்க்கு அதிவிருப்பம் அத்தலமே.

என்பது இத்தலத்தின் சிறப்பை விளக்கும் பாடலாகும். அக்னி தீர்த்தத்தில் கார்த்திகைஞாயிறு, மாசிமகம், பங்குனிஉத்திரம், வைகாசி விசாகம் ஆகியநாட்களில் நீராடி வழிபடுவோர் எல்லா நலன்களும் எய்துவர்.

சிவபெருமானுக்குச் சொந்தமான உறையூர் நந்தவனத்தில் பணியாளன் கொய்துவந்த செவ்வந்திமலர்களே மன்னன் தன் மனேவியர்க்கு அளித்தான். மூத்தமனேவி அம்மலரைச் சிவ பெருமானுக்கு அணிவித்து வந்தாள். இளேயவள் தான் சூடி மகிழ்ந்தாள். உறையூர் மண்மாரியால் அழிந்தது. மூத்தாள் இருந்த திருக்காட்டுப் பள்ளிமட்டும் அழியாமல் பிழைத்தது எனக் கூறுவர்.

**திருவிழா:**

நான்கு கால நித்கிய பூசைகள் நடைபெறுகின்றன. பங்குனி உத்திரம் பெருவிழா. பெருமான் பங்குனி உத்திரத்தில் காவிரியில் தீர்த்தம்கொடுத்தருளுவார். இவ்விழா இவ்வூருக்குத் தனிச் சிறப்புத்தரும் பெருவிழாவாகும்.

**சூழ உள்ள தலங்கள்:**

திருக்கானூர், திருஆலம்பொழில், அன்பிலாலந்துறை, திரு மழபாடி, திருவையாறு, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி முதலிய தலங்கள் இத்தலத்தைச் சூழ உள்ளனவாகும்.

**கல்வெட்டுகள்:**

முதலாம் ஆதித்தசோழன் காலத்துத் திருப்பணியைப் பெற்றது இத்திருக்கோயில். பள்ளி என்ற சொல்லைக் கொண்டு ஒருகாலத்தில் இவ்வூர் சமணர்கள் வாழ்ந்தஇடமாக இருக்கலாம் எனக் கருதுகின்றனர். அதற்கேற்றபடி 24-ஆம் சைண தீர்த்தங்கரரின் சிலை இவ்வூரில் கிடைத்துள்ளது.

சோணுடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன் கல்வெட்டு ஒன்றும் கோனேரின்மை கொண்டான் கல்வெட்டு ஒன்றும் ஆக இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்விரு கல்வெட்டுக் களிலும் அம்பாள்பெயர் அழகமர்மங்கை எனக் குறிக்கப்படு கின்றது. அம்பாள்கோயில் சுந்தரபாண்டியன் அரியணையேறிய ஏழாம் ஆண்டில் (கி. பி. 1216 ல்) திருப்பணி செய்யப்பட்ட தாகக் குறிக்கப்பட்டுள்ளது.

**நூல்கள்:**

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் பாடியருளிய இரண்டு திருப்பதிகங்களைப் பெற்றது இத்தலம். வெள்ளியம்பலவாண முனிவரின் சீடராகிய சிவப்பிரகாசர் உப்புவிற்கும் ஒரு பெண்ணின் புலமையையும் தகுதியையும் அறிந்து அப் பெண்ணைப் பார்த்து,

'நிறைய உளதோ வெளிதோ கொளுவேம்
பிறையை முடிக்கணிந்த பெம்மான்—உறையும்
திருக்காட்டுப் பள்ளி திரிபாவாய் நீயிங்
கிருக்காட்டுப் பள்ளி யெமக்கு'

எனப்பாடியருள அப்பெண்,

'தென்னேங்கு தில்லைச் சிவப்பிரகா சப்பெருமான்
பொன்னேங்கு சேவடியைப் போற்றினேம்—அன்னேன்
திருக்கூட்டம் அத்தனைக்கும் தெண்டனிட்டோம் தீராக்
கருக்கூட்டம் போக்கினேம் காண்'

என மறுமொழிகூறிப் பணிந்து நற்கதிபெற்ருள் எனக்கூறுவர். இத்தலத்தைப்பற்றிய விரிவான வரலாறு தேவஸ்தானத்தில் வெளியிடப்பெற்றுள்ளது.

## திருவாலம்பொழில்

தஞ்சைமாவட்டத்தில் திருப்பூந்துருத்திக்கு மேற்கே 2 கி. மீட்டர் தூரத்தில் காவிரியின் தென்கரையில் உள்ளது இத் திருத்தலம். திருக்கண்டியூரிலிருந்து திருக்காட்டுப்பள்ளி செல்லும் பேருந்துச்சாலையில் விளங்குகிறது.

இறைவர் திருப்பெயர் :- அருள்மிகு ஆத்மநாதேசுவரர்.
இறைவியாரின் திருப்பெயர் :- அருள்மிகு ஞானம்பிகை.

**தலச் சிறப்பு :**

இக்கோயில் மேற்குநோக்கிய சந்நிதியை உடையது. காசிபர் நாகர் அஷ்டவசுக்கள் இவர்களால் வழிபடப்பெற்றது இத்தலம் தீர்த்தங்கள் - திருப்பாற்குளம், காவிரிநதி. தல விருக்ஷம் - ஆலமரம்.

**கல்வெட்டு வரலாறு ,**

இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் மிகவும் சிதைந்துள்ளன. இதில் பரம்பைக்குடி திருவாலம்பொழில் உடைய மகாதேவர் என இத்தலப் பெருமான் குறிப்பிடப்பெறுகிருர். இவ்வூர்த் திருத்தாண்டகத்திலும் அப்பரடிகள் 'தென்பரம்பைக் குடியின்மேய திருவாலம்பொழிலானைச் சிந்தி நெஞ்சே' எனக் கூறியருளினுர்.

உ
சிவமயம்

# மேலைத்திருக்காட்டுப்பள்ளித்திருப்பதிகங்கள்

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்தது

### திருப்பதிக வரலாறு

திருநெடுங்களத்து முதல்வனை "நின்பால் நெஞ்சம் செலாவகை நேர்விலக்கும் இடும்பைகள் தீர்த்தருள் செய்வாய்" என்னும் இன்னிசை மாலைகொண்டு ஏத்திப் பிறபதிகள் அனைத்தும் பணிந்து, நியமம் போற்றி, மேலைத் திருக்காட்டுப் பள்ளிச் செஞ்சடை நம்பர்கோயிலை எய்தி, முன்றில் வலம் கொண்டு இறைஞ்சி வீழ்ந்து, மொய்கழற் சேவடி போற்றி செய்து, மன்றுள் நின்றுடலை மனத்துள் வைப்பாராய்ப் பாடி வாழ்த்துற நின்றது இத்திருப்பதிகம்.

**பண் - கொல்லி**

திருச்சிற்றம்பலம்

வாருமன் னும்முலை மங்கையோர் பங்கினன்
ஊருமன் னும்பலி உண்பதும் வெண்டலை
காருமன் னும்பொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
நீருமன் னுஞ்சடை நிமலர்தந் நீர்மையே. 1

திருத்தனார் நீள்சடை மதியொடு பாம்பணி
கருத்தனார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
அருத்தனார் அழகமர் மங்கையோர் பாகமாப்
பொருத்தனார் கழலிணை போற்றுதல் பொருளதே. 2

பண்ணினுர் அருமறை பாடினுர் நெற்றியோர்
கண்ணினுர் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
விண்ணினுர் விரிபுனல் மேவினுர் சடைமுடி
அண்ணலார் எம்மையா ளுடையஎம் அடிகளே. 3

பணங்கொள்நா கம்அரைக் கார்ப்பது பல்பலி
உணங்கலோ டுண்கலன் உறைவது காட்டிடைக்
கணங்கள் கூடித்தொழு தேத்துகாட் டுப்பள்ளி
நிணங்கொள் சூலப்படை நிமலர்தம் நீர்மையே. 4

வரையுலாம் சந்தொடு வந்திழி காவிரிக்
கரையுலாம் இடுமணல் சூழ்ந்தகாட் டுப்பள்ளித்
திரையுலாம் கங்கையும் திங்களும் சூடியங்
கரையுலாங் கோவணத் தடிகள்வே டங்களே. 5

வேதனுர் வெண்மழு வேந்தினுர் அங்கமுன்
ஓதினுர் உமையொரு கூறனுர் ஒண்குழைக்
காதினுர் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
நாதனுர் திருவடி நாளும்நின் றேத்துமே. 6

மையினுர் மிடறனுர் மான்மழு வேந்திய
கையினுர் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளித்
தையலோர் பாகமாத் தண்மதி சூடிய
ஐயனுர் அடிதொழ அல்லல்ஒன் றில்லையே. 7

சிலைதனுல் முப்புரஞ் செற்றவன் சீரினுர்
மலைதனுல் வல்லரக் கன்வலி வாட்டினுன்
கலைதனுர் புறவணி மல்குகாட் டுப்பள்ளி
தலைதனுல் வணங்கிடத் தவமது ஆகுமே. 8

செங்கண்மால் திகழ்தரு மலருறை திசைமுகன்
தங்கையால் தொழுதெழத் தழலுரு ஆயினுன்
கங்கையார் சடையினுன் கருதுகாட் டுப்பள்ளி
அங்கையால் தொழும்அவர்க் கல்லல்ஒன் றில்லையே. 9

போதியார் பிண்டியார் என்றவப் பொய்யர்கள்
வாதினால் உரையவை மெய்யல வைகலும்
காரினார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
ஏரினால் தொழுதெழ இன்பம்வந் தெய்துமே. 10

பொருபுனல் புடையணி புறவநன் னகர்மன்னன்
அருமறை யவைவல்ல அணிகொள்சம் பந்தன்சொல்
கருமணி மிடற்றினன் கருதுகாட் டுப்பள்ளி
பரவிய தமிழ்சொல்லப் பறையுமெய்ப் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

112-832

# திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்தது

## திருப்பதிக வரலாறு

ஞானவரசு திருப்பழையாறைவடதளியிறைஞ்சி வாய்மைக் குறுந்தொகைகள் பாடிப் பொன்னியினில் இரண்டு கரையும் பொருவிடையார்தங்கும் இடங்கள்புக்கிறைஞ்சித் திருக்காட்டுப் பள்ளியீசரைத் தொழுது பாடியது இத்திருப்பதிகம்.

### திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

மாட்டுப் பள்ளி மகிழ்ந்துறை வீர்க்கெலாம்
கேட்டுப் பள்ளிகண் டீர்கெடு வீரிது
ஓட்டுப் பள்ளிவிட் டோட லுருமுனம்
காட்டுப் பள்ளியு ளான்கழல் சேர்மினே. 1

மாட்டைத் தேடி மகிழ்ந்துநீர் நும்முளே
நாட்டுப் பொய்யெலாம் பேசிடும் நாணிலீர்
கூட்டை விட்டுயிர் போவதன் முன்னமே
காட்டுப் பள்ளியு ளான்கழல் சேர்மினே. ௨

தேனை வென்றசொல் லாளொடு செல்வமும்
ஊனை விட்டுயிர் போவதன் முன்னமே
கான வேடர் கருதுங்காட் டுப்பள்ளி
ஞான நாயக னைச்சென்று நண்ணுமே. ௩

அருத்த மும்மனை யாளொடு மக்களும்
பொருத்த மில்லைபொல் லாதது போக்கிடும்
கருத்தன் கண்ணுத லண்ணல்காட் டுப்பள்ளித்
திருத்தன் சேவடி யைச்சென்று சேர்மினே. 4

சுற்ற முந்துணை யும்மனை வாழ்க்கையும்
அற்ற போதணை யாரவ ரென்றென்றே
கற்ற வர்கள் கருதுங்காட் டுப்பள்ளிப்
பெற்ற மேறும் பிரானடி சேர்மினே. 5

அடும்புங் கொன்றையும் வன்னியும் மத்தமும்
துடும்பல் செய்சடைத் தூமணிச் சோதியான்
கடம்பன் தாதை கருதுங்காட் டுப்பள்ளி
உடம்பி னர்க்கோர் உறுதுணை யாகுமே. 6

மெய்யின் மாசுடை யாருடல் மூடுவார்
பொய்யை மெய்யென்று புக்குடன் வீழன்மின்
கையின் மானுடை யான்காட்டுப் பள்ளியெம்
ஐயன் தன்னடி யேயடைந் துய்ம்மினே. 7

வேலை வென்றகண் ணாரை விரும்பிநீர்
சீலங் கெட்டுத் திகையன்மின் பேதைகாள்
காலை யேதொழுங் காட்டுப்பள் ளியுறை
நீல கண்டனை நித்தல் நினைமினே. 8

இன்று ளார்நாளை யில்லை யெனும்பொருள்
ஒன்றும் ஓரா துழிதரும் ஊமர்காள்
அன்று வானவர்க் காக விடமுண்ட
கண்ட னார்காட்டுப் பள்ளிகண் டுய்ம்மினே. 9

எண்ணி லாஅரக் கன்மலை யேந்திட
எண்ணி நீண்முடி பத்தும் இறுத்தவன்
கண்ணு ளார்கரு துங்காட்டுப் பள்ளியை
நண்ணு வாரவர் தம்வினை நாசமே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## பன்னிரு திருமுறை ஆசிரியர்கள்

திருஞானசம்பந்தர் வாகீசர் சுந்தரர்
திருவாத வூரர் மற்றைத்
திருமாளிகைத் தேவர் சேந்தனார் கருவூரர்
தெள்ளு பூந்துருத்தி நம்பி
வருஞான கண்டரா தித்தர் வேணாட்டடிகள்
வாய்ந்த திரு வாலி யமுதர்
மருவு புருடோத்தமர் சேதிராயர் மூலர்
மன்னு திரு ஆல வாயார்
ஒருகாரைக் காலம்மை ஐயடிகள் சேரமான்
ஒளிர் கீரர் கல்லாடனார்
ஒண் கபிலர் பரணர் மெய்உண ரிளம்பெருமானோடு
ஓங்கும் அதிராவடிகளார்
திருமேவு பட்டினத்தடிகளொடு
நம்பியாண்டார் நம்பி சேக்கிழாரும்
சிவநெறித் திருமுறைகள் பன்னிரண் டருள்செய்த
தெய்விகத்தன்மையோரே.

உ
சிவமயம்

# திருவாலம்பொழில் திருப்பதிகம்

## திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்தது

### திருப்பதிக வரலாறு

நாயனார், ஆவடுதண்டுறையிலிருந்து திருப்பழையாறை வடதளி சென்று தொழுது பொன்னியின் இருகரைகளிலும் உள்ள தலங்களை வணங்கிக்கொண்டு திருவானைக்கா செல் பொழுதில் திருவாலம்பொழில் பணிந்து பாடியருளியது இத் திருப்பதிகம். (திருநாவுக்கரசர் புராணம் 301)

### திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

கருவாகிக் கண்ணுதலாய் நின்றான் தன்னைக்
கமலத்தோன் தலையரிந்த காபாலியை
உருவார்ந்த மலைமகளோர் பாகத் தானை
உணர்வெலா மானானை ஓசை யாகி
வருவானை வலஞ்சுழியெம் பெருமான் தன்னை
மறைக்காடும் ஆவடுதண் டுறையும் மேய
திருவானைத் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. 1

உரித்தானைக் களிறதன்தோல் போர்வை யாக
உடையானை உடைபுலியி னதளே யாகத்
தரித்தானைச் சடையதன்மேற் கங்கை அங்கைத்
தழலுருவை விடமமுதா வுண்டி தெல்லாம்
பரித்தானைப் பவளமால் வரையன் னானைப்
பாம்பணையான் தனக்கன்றங் காழி நல்கிச்
சிரித்தானைத் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. 2

உருமூன்ருய் உணர்வின்கண் ஒன்ரு ஞானை
ஓங்கார மெய்ப்பொருளை உடம்பி னுள்ளால்
கருவீன்ற வெங்களவை யறிவான் தன்னைக்
காலனைத்தன் கழலடியால் காய்ந்து மாணிக்
கருளீன்ற ஆரமுதை அமரர் கோனை
யள்ளூறி யெம்பெருமான் என்பார்க் கென்றுந்
திருவீன்ற தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. 3

பார்முழுதாய் விசும்பாகிப் பாதா ளமாம்
பரம்பரனைச் சுரும்பமருங் குழலாள் பாகத்
தாரமுதாம் அணிதில்லைக் கூத்தன் தன்னை
வாட்போக்கி யம்மானை யெம்மா னென்று
வாரமதாம் அடியார்க்கு வார மாகி
வஞ்சனை செய் வார்க்கென்றும் வஞ்ச னுகுஞ்
சீரரசைத் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. 4

வரையார்ந்த மடமங்கை பங்கன் தன்னை
வானவர்க்கும் வானவனை மணியை முத்தை
அரையார்ந்த புலித்தோல்மேல் அரவ மார்த்த
அம்மானைத் தம்மானை அடியார்க் கென்றும்
புரையார்ந்த கோவணத்தெம் புனிதன் தன்னைப்
பூந்துருத்தி மேயானைப் புகலூ ரானைத்
திரையார்ந்த தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. 5

விரிந்தானைக் குவிந்தானை வேத வித்தை
வியன்பிறப்போ டிறப்பாகி நின்ருன் தன்னை
அரிந்தானைச் சலந்தரன்றன் உடலம் வேரு
ஆழ்கடல்நஞ் சுண்டிமையோ ரெல்லா முய்யப்

பரிந்தானைப் பல்லசுரர் புரங்கள் மூன்றும்
பாழ்படுப்பான் சிலைமலைநாண் ஏற்றி அம்பு
தெரிந்தானைத் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. 6

பொல்லாத என்னழுக்கிற் புகுவான் என்னைப்
புறம்புறமே சோதித்த புனிதன் தன்னை
எல்லாருந் தன்னை யிகழ அந்நாள்
இடுபலியென் றகந்திரியும் எம்பி ரானைச்
சொல்லாதா ரவர்தம்மைச் சொல்லா தானைத்
தொடர்ந்துதன் பொன்னடியே பேணு வாரைச்
செல்லாத நெறிசெலுத்த வல்லான் தன்னைத்
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. 7

ஐந்தலைய நாகவணைக் கிடந்த மாலோ(டு)
அயன்தேடி நாடரிய அம்மான் தன்னைப்
பந்தணவு மெல்விரலாள் பாகத்தானைப்
பராய்த்துறையும் வெண்காடும் பயின்றான் தன்னைப்
பொந்துடைய வெண்டலையிற் பலிகொள் வானைப்
பூவணமும் புறம்பயமும் பொருந்தி னானைச்
சிந்தியவெந் தீவினைகள் தீர்ப்பான் தன்னைத்
திருவாலம் பொழிலானைச் சிந்திநெஞ்சே. 8

கையிலுண் டுழல்வாருஞ் சாக்கியருங்
கல்லாத வன்மூடர்க் கல்லா தானைப்
பொய்யிலா தவர்க்கென்றும் பொய்யி லானைப்
பூண்நாகம் நாணுகப் பொருப்பு வில்லாக்
கையினார் அம்பெரிகால் ஈர்க்குக் கோலாக்
கடுந்தவத்தோர் நெடும்புரங்கள் கனல்வாய் வீழ்த்த
செய்யினார் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. 9, 10

திருச்சிற்றம்பலம்.

## திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

வாழ்த்துவதும் வானவர்கள்
தாம்வாழ்வான் ; மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து
தம்மைஎல்லாந் தொழவேண்டி ;
சூழ்த்துமது கரமுரலுந்
தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான்
யானும்உன்னைப் பரவுவனே.

திருச்சிற்றம்பலம்

## திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிர்இல்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா ஊர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

திருச்சிற்றம்பலம்

# திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

தாதையைத் தாள்அற வீசிய சண்டிக்கவ்
வண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும்
போனக மும்அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

## பெரியபுராணம்

திருச்சிற்றம்பலம்

சென்று திகழ்திருக் காட்டுப்பள்ளிச்
செஞ்சடை நம்பர்தங் கோயிலெய்தி
முன்றில் வலங்கொண்(டு) இறைஞ்சிவீழ்ந்து
மொய்கழற் சேவடி கைதொழுவார்
கன்றணை ஆவின் கருத்துவாய்ப்பக்
கண்ணுத லாரைமுன் போற்றிசெய்து
மன்றுள்நின்(று) ஆடல் மனத்துள்வைப்பார்
'வாருமன் னும்முலை' பாடி வாழ்ந்தார்.

— சம்பந்தர் புராணம்.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

# திருப்பதிகங்களின் கருத்துரை

## மேலைத்திருக்காட்டுப்பள்ளி

### பதிகம் 1

கச்சணிந்த மார்பினராகிய உமையம்மையை ஓர்பாகத்தில் உடையவர். அவர் ஊரில் ஏற்கும் பிச்சையை உண்பது வெண்டலையிலாகும். திருக்காட்டுப்பள்ளி நிமலரின் இயல்புகள் இவை. (1)

நடனமாடுபவர். சடைமுடியில் மதியும் பாம்பும் அணிந்தவர். பொருளாயுள்ளவர். மங்கைபங்கினர். அவர்தம் திருவடிகளைப் போற்றுவதே பயனுடைய செயலாகும். (2)

பண்ணோடு வேதங்களைப் பாடியவர். நெற்றிக்கண்ணர். சடைமுடியில் கங்கையைத் தரித்தவர் எம்தலைவர். (3)

இடையில் கட்டியிருப்பது நாகம். பலி ஏற்று உண்பது. உலர்ந்த மண்டையோட்டில். உறைவது இடுகாட்டில். இவை காட்டுப்பள்ளி இறைவரின் இயல்புகள். (4)

மலையிற் செழித்த சந்தனமரங்களோடு வந்து பாயும் காவிரிக் கரையில் உள்ள காட்டுப்பள்ளி இறைவர் கங்கையும் திங்களும் சூடியவர். அரையில் கோவணம் உடுத்தவர். (5)

காட்டுப்பள்ளி இறைவர் வேதங்களை அருளியவர். மழு ஏந்தியவர். உமைகூறர். குழைக்காதர். அவர் திருவடிகளை நாடோறும் துதிப்போம். (6)

காட்டுப்பள்ளி இறைவர் நீலகண்டர். மான் மழு ஏந்திய கையர். மங்கைபங்கர். தண்மதி சூடிய தலைவர். அவர் திருவடிகளை வணங்கினால் அல்லல் இல்லை. (7)

மேரு மலையாகிய சிலையால் முப்புரம் செற்றவர். புகழாளர். கைலைமலையினால் இராவணனது ஆற்றலை ஒடுக்கியவர். காட்டுப்பள்ளியில் உறையும் அவ்விறைவரைத் தலையால் வணங்கத் தவமாகும். (8)

திருக்காட்டுப்பள்ளியுறை இறைவர் திருமாலும் பிரமனும் வணங்கத் தழலுருவமாயினவர், கங்கை அணிந்த சடைமுடியர். கைகளால் அவரைத்தொழுவார்க்கு அல்லல்இல்லை. (9)

புத்தர் சமணர்கள் கூறும் பொய் வாருங்கள் உண்மையல்ல. அவற்றை விடுத்து, காட்டுப்பள்ளி இறைவரைத் தொழுதெழ இன்பம் வந்தெய்தும். (10)

காட்டுப்பள்ளியில் உறையும் இறைவரை ஞானசம்பந்தன் பாடிப் பரவிய இப்பதிகத்தை ஓதுபவர் பாவம் நீங்குவர். (11)

## பதிகம் 2

செல்வம் நிறைந்த இருக்கையில் தங்கி உடம்பை மெய்யென்று கருதுகின்றவர்களே! இவ்வுடலும் செல்வமும் ஒருநாள் அழியும். ஆதலால் உயிர் போவதன்முன் காட்டுப்பள்ளியுளான் கழல்சேர்மின். (1)

செல்வத்தைத் தேடிப் பொய்பேசித் திரியும் நாணம் அற்றவர்களே! உடலை விட்டு உயிர் போவதற்குமுன் காட்டுப்பள்ளி இறைவன் கழலைச்சேர்மின். (2)

மனைவியோடு செல்வமும் உயிரும் போவதற்கு முன் காட்டுப்பள்ளி ஞான நாயகனைச் சென்றடையுங்கள். (3)

செல்வம் மனைவி மக்கள் இவை நிலையற்றவை; தீமையைப் போக்க வல்ல தலைவரும் திருக்காட்டுப்பள்ளியில் உறையும் திருத்தரும் ஆகிய இறைவர் திருவடிகளைச் சென்றடைமின். (4)

சுற்றமும் துணைவியும் மனைவாழ்க்கையும் உயிர் போனபின் உடன்வாரா. காட்டுப்பள்ளி இறைவனின் திருவடிகளை அடைதலே நமக்கு உறுதியாகும். (5)

அரும்பு, கொன்றை, வன்னி, ஊமத்தமலர்களை அணிந்த சடைமுடியர். தூமணிச் சோதியர். முருகனின் தந்தை. இவ் வுடலோடு வாழ்பவர்க்கு அவரே துணையாவார். (6)

சமண பௌத்தர்களின் பொய்யுரைகளை மெய்யென்றுகருதி அச்சமயங்களைச் சாராதீர். காட்டுப்பள்ளி இறைவன் திரு வடிகளை அடைந்து உய்வீர். (7)

பெண்டிரை விரும்பி ஒழுக்கம் கெட்டுத் திகையாதீர். காட்டுப்பள்ளியில் உறையும் இறைவனை காலத்தில் தொழுங்கள். நாடோறும் நினையுங்கள். (8)

இன்றைக்கிருப்பவர் நாளைக்கில்லை என்னும் பழமொழியை ஓராது திரியும் ஊமர்களே! தேவர்களுக்காக விடத்தை உண்ட நீலகண்டனை வழிபட்டு உய்மின். (9)

கயிலைமலையை எடுத்த இராவணனின் தலைகளை நெரித்தவ ராகிய காட்டுப்பள்ளி இறைவரை நண்ணுவாரது வினை நாசமாகும். (10)

## திருவாலம்பொழில்

### பதிகம் 1

நெஞ்சிற்கு அறிவுறுத்தல்.

எல்லாவற்றிற்கும் முதலாக விளங்குபவன். பிரமனது தலையை அரிந்தவன். மலைமகளை ஒருபாதியில் உடையவன். உணர்வெலாம் ஆனவன். ஓசையாகி வருபவன். நெஞ்சே! அவனை நினை. (1)

O23:38.9H93.T
N78



யானைத்தோலைப் போர்த்துப் புலித்தோலை உடுத்தவன். சடையில் கங்கை தரித்தவன். தழலுருவினன். விடத்தை அமுதாக உண்டவன். திருமாலுக்குச் சக்கரம் அருளியவன். (2)

அயன் அரி அரன் ஆனவன். உணர்வில் திகழ்பவன். ஓங்காரப்பொருளானவன். நமது எண்ணத்தை அறிபவன். காலனைக்காய்ந்து மார்க்கண்டர்க்கு அருள்புரிந்தவன். அன்போடு நினைவார்க்குச் செல்வம் அருள்பவன். (3)

மண் விண் பாதளம் ஆனவன். மாதொரு கூறன். வாட்போக்கியில் வாழ்பவன். அன்பர்க்கு அன்பன். வஞ்சர்க்கு வஞ்சன். (4)

பார்வதி கணவன். தேவர்கட்குத் தலைவன். புலித்தோல் மேல் நாகத்தைக் கட்டியவன். அடியார்களுக்குத் தலைவன். (5)

படைப்புக்காலத்தில் விரிந்தும், அழிப்புக்காலத்தில் குவிந்தும் தோன்றுபவன். தோற்ற ஒடுக்கங்களைச் செய்பவன். சலந்தரனைக் கொன்றவன். விடமுண்டு தேவர்களைக்காத்தவன். திரிபுரம் எரித்தவன். (6)

என் உடலிற் புகுந்தவன். என்னைச் சோதித்தவன். பலியேற்றவன். தொடர்ந்து தன் திருவடிகளைப் பேணுவார்க்கு வீடுபேறு அருள்பவன். (7)

திருமால் பிரமர் தேடற்கரியவன். பார்வதி மணாளன். வெண்டலையில் பலிகொள்பவன். நம் தீவினைகளைத் தீர்ப்பவன்.

சமணர் புத்தர் முதலானவர்க்கு அல்லாதவன். பொய்யற்றவர்களுக்குப் பொய்யாது அருள்பவன். திரிபுரம் எரித்தவன். திருவாலம்பொழிலில் உள்ளவன். அவனை நெஞ்சே நீ நினைந்து உய்வாயாக. (9-10)

---

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

## தருமையாதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமய உண்மைப் பொருள் முதலியவற்றைக் குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந் துணையானது. கையொப்பத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி ஞானசம்பந்தம் பெற்றுப் பயனுறவும்.

| | | | |
|---|---|---|---|
| **ஆண்டுச் சந்தா ( உள்நாடு )** | ... | **ரூ.** | **7—00** |
| **ஆண்டுச் சந்தா ( சிலோன் )** | ... | **ரூ.** | **9—00** |
| **ஆண்டுச் சந்தா (வெளிநாடு)** | ... | **ரூ.** | **15—00** |
| **ஆட்ள் சந்தா** | ... | **ரூ.** | **100—00** |

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி:—

செயலாளர்,
ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம் 609 001
தஞ்சை மாவட்டம்.

குறிப்பு:—

ஞானசம்பந்தம் தவிர பிற தருமையாதீன வெளியீடுகளைப் பெற விரும்புவோர், மேலாளர், ஞானசம்பந்தம் பதிப்பகம் - தருமபுரம். மாயூரம் - 609 001 என்ற முகவரிக்கே தொகை அனுப்பிப் பெறவேண்டும்.